தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1982 மார்ச் 29.

பங்குனி 16, துன்மதி—திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு."

செய்யத்தக்க செயலை ஆராய்தலும், அதற்குரிய வழிகளை ஆராய்ந்து செய்தலும், துணிவாகக் கருத்தைச் சொல்லுதலும் வல்லவரே அமைச்சர்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிடாத வினாக்கள்.

இணைப்பில் உடுக்குறியிடாத வினாக்களையும் அவற்றுக்கான விடைகளையும் காண்க.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*)உடுக்குறியிடப் பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிக்கை அளித்தல்.

(அ) கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு, 1980
மீதான ஆய்வுக் குழு.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1980) மீதான ஆய்வுக்குழுவின் அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) மதிப்பீட்டுக் குழு

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, குடிமைப் பொருள் வழங்கு துறை (இரண்டாம் பகுதி) பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த கருத்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி மதிப்பீட்டுக் குழுவின் பன்னிரெண்டாவது (ஏழாவது சட்ட மன்றப் பேரவை) அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.